மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.02/2023
அ.வ.எண்.113/2023

பவுனா ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. புஷ்பா
2. கலைவாணி
3. சுகன்யா
4. ரவி
5. கோபிநாத்
6. கோவிந்தன்
7. தினேஷ்
8. கோவிந்தராஜ்
9. சுமதி
10. பழனிசாமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 25.06.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.P.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 மற்றும் 7 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.ஸ்டாலின்ராஜா அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.தேவாரம் அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாததால் 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், 8, 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.மனோகர் அவர்கள் ஆஜராகியும், 10 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.ரணதேவ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதி/மனுதாரரால் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆதியில் தாவா சொத்து மற்றும் இதர சொத்து பூர்வீகமாயும், வாய்மொழி பாகப்பிரிவினைப்படியும் ஒரு பெரியசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டு, கடந்த 21.09.2007ம் தேதியில் பெரியசாமியின் வாரிசுகளான செல்லம்மாள், ரவி, கோபிநாத், கோவிந்தன், புஷ்பா, சுகன்யா, கலைவாணி ஆகியோர் மேச்சேரி சார்பதிவாளர் கிரய ஆவண எண்.2544/2007ன்படி மனுதாரருக்கு உரிய மறுபயன் கொடுத்து கிரயம் அளித்துள்ளனர். கிரய தேதியிலிருந்து மனுதாரர் தாவா சொத்தில் தனிப்பட்ட முறையில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார். மனுதாரருக்கு படிப்பறிவு இல்லாததால் தாவா சொத்திற்கு தனிப்பட்டா பெறவில்லை. தற்போது மனுதாரர் தனிப்பட்டா கோரி மனு செய்துள்ளார். தாவா சொத்தில் மனுதாரரை தவிர வேறு யாருக்கும் எந்தவித உரிமையும், உரிமை மூலமும், சுவாதீனமும் இல்லை.

(ii) மேலும் 10ம் எதிர்மனுதாரர் கடந்த 07.05.2023ம் தேதியில் தாவா சொத்தில் அத்துமீறி நுழைய முற்பட்டதை ஊர்பெரியவர்களின் உதவியுடன் மனுதாரர் தடுத்து நிறுத்தினார். 10ம் எதிர்மனுதாரர் அவ்விடத்தை விட்டு செல்லும் போது மேலும் நிறைய ஆட்களை அழைத்து வந்து தாவா சொத்திலிருந்து மனுதாரரை அப்புறப்படுத்தி சுவாதீனத்தை எடுக்க போவதாக 10ம் எதிர்மனுதாரர் சூளுரைத்து விட்டு சென்றார். பின்னிட்டு கடந்த 11.05.2023ம் தேதியில் 10ம் எதிர்மனுதாரர் மேச்சேரி காவல் துறையினர் உதவியுடன் தாவா சொத்தை சமன்செய்ய முயற்சி செய்தார். மேலும் தாவா சொத்தின் ஒரு பகுதியை 7 முதல் 9 எதிர்மனுதாரர்களிடமிருந்து 10ம் எதிர்மனுதாரர் கிரயம் செய்ததாக கூறி 22.12.2015, 04.05.2023ம் தேதிய கிரய ஆவணங்களின் நகல்களை மனுதாரரிடம் காண்பித்தார்.

(iii) அப்போது தான் 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் 7ம் எதிர்மனுதாரருக்கு ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்து, 7ம் எதிர்மனுதாரர் கடந்த 22.12.2015ல் 8, 9 எதிர்மனுதாரர்களுக்கு மேச்சேரி சார்பதிவாளர் கிரய ஆவணம் எண்.4644/2015 என்ற

எண் கொண்ட கிரய ஆவணம் எழுதிக் கொடுத்த விவரமும், 8, 9 எதிர்மனுதாரர்கள் 10ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 04.05.2023ல் மேச்சேரி சார்பதிவாளர் கிரய ஆவண எண்.2093/2023 என்ற எண் கொண்ட கிரய ஆவணம் எழுதிக்கொடுத்த விவரமும் மனுதாரருக்கு தெரியவந்தது. தாவா சொத்தில் சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக சுவாதீனத்தில் உள்ளார். 10ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து மனுதாரருக்கு பலவகையில் இடையூறுகள் செய்ய முயற்சித்ததால் தாவா சொத்தை பார்வையிட்டு அதன் பௌதீக இயல்பு நிலைகளை கண்டறிந்து மனுதாரர்/வாதியின் ஆவணங்களின்படி அளந்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 1 முதல் 3 மற்றும் 7ம் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையின் சுருக்கம்:–

(குறிப்பாணையின் பேரில் இப்பதிலுரையை இம்மனுவின் 1 முதல் 3 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்களால் அவர்களது எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லதக்கதல்ல. மனுதாரர் இவ்வழக்கில் அவரது கணவர் மற்றும் மகன்களை 4 முதல் 6 பிரதிவாதிகளாக சேர்த்துள்ளார். நாளது தேதிவரை மனுதாரரும், 4 முதல் 6 எதிர்மனுதாரர்களும் ஒரே குடும்பமாக வசித்து வரும் நிலையில், மேற்படி அனைவரும் கூட்டு சதிசெய்து இந்த எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடனும், உட்கருத்துடனும் இவ்வழக்கில் செயல்பட்டு வருகின்றனர்.

(ii) தாவா சொத்தை மனுதாரர் பெரியசாமியின் வாரிசுதாரர்களிடமிருந்து உரிய மறுபயன் கொடுத்து கிரயம் பெற்று, சுமார் 15 ஆண்டுகளாக சுவாதீன அனுபவத்திலிருந்து வருவதாகவும், மனுதாரருக்கு படிப்பறிவு இல்லாததால் தாவா சொத்திற்கு தனிப்பட்டா பெற முடியவில்லை என்பதும், தாவா சொத்தில் மனுதாரரை தவிர வேறு யாருக்கும் எந்தவித உரிமையும், உரிமை மூலமும், சுவாதீனமும் இல்லை என்பதும், கடந்த 07.05.2023ம் தேதியில் 10ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் அத்துமீறி நுழைய

முற்பட்டார் என்பதும், பின்னிட்டு கடந்த 11.05.2023 ம் தேதியில் 10 ம் எதிர்மனுதாரர் மேச்சேரி காவல்துறையினர் உதவியுடன் தாவா சொத்தை சமன்செய்ய முயற்சி செய்தார் என்பதும் பொய்யானதாகும்.

(iii) மேலும் 10 ம் எதிர்மனுதாரர் கிரயம் பெற்ற ஆவணங்களின் நகல்களை பார்த்த போது தான், தாவா சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் 7 ம் எதிர்மனுதாரருக்கு ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்த விவரமும், 7 ம் எதிர்மனுதாரரால் 8, 9 எதிர்மனுதாரர்களுக்கு கிரய ஆவணம் அளிக்கப்பட்ட விவரமும், 8, 9 எதிர்மனுதாரர்கள் 10 ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 04.05.2023 ல் கிரய ஆவணம் எழுதிக்கொடுத்த விவரமும் தனக்கு தெரியவந்ததாக மனுதாரர் கூறுவது பொய்யானதாகும்.

(iv) தாவா சொத்தில் எவ்வித உரிமையோ, உரிமை மூலமோ, சுவாதீனமோ இல்லாத 1 முதல் 6 எதிர்மனுதாரர்களிடமிருந்து மனுதாரர் தாவா சொத்தை கிரயம் பெற்றதாக கூறுவது சட்டத்திற்கு புறம்பானதாகும். சொத்துக்களை பாகம் செய்து கொள்ளலாம் என இந்த எதிர்மனுதாரர்களை அழைத்து சென்று மனுதாரரும், 4 முதல் 6 எதிர்மனுதாரர்களும் கூட்டு சதி செய்து கிரய ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளனர். கிரய ஆவணத்தை உருவாக்கிய போது 3, 7 எதிர்மனுதாரர்கள் மைனர்கள் ஆவர். மைனர்கள் சொத்தை கிரயம் பெற வேண்டுமானால் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அனுமதி பெற்றுதான் கிரயம் பெற வேண்டும். ஆனால் மனுதாரர் அவ்வாறு எந்த அனுமதியும் பெறவில்லை. மனுதாரர் கோரியுள்ள பரிகாரமானது காலவரம்பு சட்டத்தால் பாதிப்படைகிறது. மேலும் மூல ஆவணமான பொது அதிகார ஆவணத்தை செல்லாது என விளம்புகை செய்ய எந்த பரிகாரமும் மனுதாரர் முன்வைக்காத நிலையில் மேற்படி விளம்புகை பரிகாரம் கோர மனுதாரருக்கு எந்த முகாந்திரமும் கிடையாது. உண்மையான உரிமையாளர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர மனுதாரருக்கு சட்டப்படி எந்த உரிமையும் கிடையாது.

(v) தாவா சொத்து உட்பட இதர சொத்துகள் M.காளிப்பட்டி கிராமத்தில் அர்த்தனாரி மற்றும் நல்லம்மாளுக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி நபர்களுக்கு பெரியசாமி உட்பட 6 வாரிசுதாரர்கள் உள்ளனர் என்றும், மேற்படி வாரிசுதாரர்களிடையே தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாமல் கூட்டு அனுபவத்தில் இருந்து வரும் நிலையில், பாகம் பிரிக்காத மேற்படி சொத்து குறித்து மனுதாரரின் பெயரில் ஏற்பட்டுள்ள கிரய ஆவணம் செல்லாத ஆவணமாகும். மேலும் மேற்படி அர்த்தனாரி, நல்லம்மாளின் வாரிசுகளுக்கும் தாவா சொத்தில் உரிமையுள்ளதால் அவர்கள் அனைவரும் இவ்வழக்கில் அவசிய தரப்பினர்கள் ஆவார்கள். இவ்வழக்கானது உரிய தரப்பினர்களை சேர்க்காத தோசத்தால் நிலைக்கத்தக்கதல்ல.

(vi) மனுதாரரிடம் தாவா சொத்து குறித்து சுவாதீனமும் கிடையாது. இவ்வழக்கை விளம்புகை மற்றும் சுவாதீனப்பரிகாரம் கேட்டு அதற்கான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தி தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் அடுத்தவருடைய ஆவணத்தை செல்லாது என விளம்புகை கேட்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. நீதிமன்ற ஆணையரை நியமித்து வழக்கு சொத்தை பார்வையிட வேண்டிய அவசியம் சட்டப்படி எழவில்லை. இவ்வழக்கை பொறுத்தவரை நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் அசல் வழக்கின் இறுதியான முடிவிற்கு தேவையில்லாத ஒன்றாகும். இந்த எதிர்மனுதாரர்களை அலைக்கழிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 3, 7 ம் எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

<u>3) 8, 9 ம் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரை, குறிப்பாணையின் பேரில் 8, 9 ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>

(10 ம் எதிர்மனுதாரரால் குறிப்பாணையின் பேரில் ஏற்றுக் கொண்டுள்ள எதிருரை சங்கதிகளும், 8, 9 எதிர்மனுதாரர்களின் எதிருரை சங்கதிகளும் ஒன்றாக உள்ளதால் அவற்றின் பிரதான பகுதிகள் இந்நீதிமன்றத்தால் ஒன்றாக விவாதிக்கப்படுகிறது)

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லதக்கதல்ல. தாவா சொத்தில் மனுதாரருக்குள்ள சுவாதீனத்தை நிரூபிக்க மோசடியான கிரய ஆவணத்தை

தவிர வருவாய்துறை ஆவணங்கள் எதையும் மனுதாரர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 8, 9 எதிர்மனுதாரர்கள் கிரயம் பெற்றது குறித்தும், கிரய சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருவது குறித்தும் மனுதாரருக்கு நன்கு தெரியும். உரிய மறுபயன் கொடுத்து உரிய தரப்பினர்களிடம் சட்டத்திற்கு உட்பட்டு 8, 9 எதிர்மனுதாரர்கள் கிரையமும், சுவாதீனமும் பெற்றுள்ளனர். இந்த எதிர்மனுதாரர்கள் பெயரிலுள்ள கிரய ஆவணங்களை கேள்வி கேட்க மனுதாரருக்கு தார்மீக அடிப்படையிலும், சட்டப்படியும் உரிமையில்லை.

(ii) பின்னிட்டு 8, 9 எதிர்மனுதாரர்கள் உரிய மறுபயன் பெற்றுக்கொண்டு 10ம் எதிர்மனுதாரருக்கு கிரயமும், சுவாதீனமும் செய்து கொடுத்தனர். 10ம் எதிர்மனுதாரர் வருவாய்துறை ஆவணங்களை அவரது பெயருக்கு மாற்றி சுவாதீனத்தில் இருந்து வருகிறார். இது குறித்தும் மனுதாரருக்கு தெரியும். 8, 9 எதிர்மனுதாரர்கள் கிரயம் பெற்ற நிலத்தை ஏற்கனவே விற்பனை செய்துவிட்டதால் இவ்வழக்கிற்கு 8, 9 எதிர்மனுதாரர்கள் தேவையற்ற தரப்பினர்கள் ஆவர். நீதிமன்ற ஆணையரை நியமித்து வழக்கு சொத்தை பார்வையிட வேண்டிய அவசியம் சட்டப்படி எழவில்லை. இவ்வழக்கை பொறுத்தவரை நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் அசல் வழக்கின் இறுதியான முடிவிற்கு தேவையில்லாத ஒன்றாகும். இந்த எதிர்மனுதாரர்களை அலைக்கழிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 8, 9, 10ம் எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள், சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>5) பிரச்சினை :–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

6) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் மனுதாரர், ஒரு பெரியசாமியின் வாரிசுதாரரிடமிருந்து தாவா சொத்தை கடந்த 21.09.2007 ம் தேதியில் கிரயம் பெற்று சுமார் 15 ஆண்டுகளாக அனுபவித்து வருவதாகவும், தாவா சொத்தில் மனுதாரரை தவிர வேறு யாருக்கும் எந்தவித உரிமையும், உரிமை மூலமும், சுவாதீனமும் இல்லை என்றும், கடந்த 11.05.2023 ம் தேதியில் 10 ம் எதிர்மனுதாரர் மேச்சேரி காவல் துறையினர் உதவியுடன் தாவா சொத்தை சமன்செய்ய முயற்சி செய்தார் என்றும், அப்போது தான் 10 ம் எதிர்மனுதாரர் பெயரிலுள்ள கிரய ஆவணத்தை பரிசீலித்த போது தான் 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் 7 ம் எதிர்மனுதாரருக்கு ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்தது குறித்தும், அதன் அடிப்படையில் 7 ம் எதிர்மனுதாரர் 8, 9 எதிர்மனுதாரர்களுக்கு கிரய ஆவணம் அளித்தது குறித்தும், அதன் அடிப்படையில் 8, 9 எதிர்மனுதாரர்கள் 10 ம் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரய ஆவணம் எழுதிக்கொடுத்த விவரமும் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(ii) மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் 10 ம் எதிர்மனுதாரர் அத்துமீறி நுழைந்து மனுதாரருக்கு பலவகையில் இடையூறுகள் செய்ய முயற்சித்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்து, அதில் தாவா சொத்தை பார்வையிட்டு அதன் பௌதீக இயல்பு நிலைகளை கண்டறிந்து மனுதாரர்/வாதியின் ஆவணங்களின்படி அளந்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) 1 முதல் 3, 7 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சொத்துக்களை பாகம் செய்து கொள்ளலாம் என இந்த எதிர்மனுதாரர்களை அழைத்து சென்று மனுதாரரும், 4 முதல் 6 எதிர்மனுதாரர்களும் கூட்டு சதி செய்து கிரய ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளனர் என்றும், கிரய ஆவணத்தை உருவாக்கிய போது 3, 7 எதிர்மனுதாரர்கள் மைனர்கள் என்றும், மைனர்கள் சொத்தை கிரயம் பெற வேண்டுமானால் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அனுமதி பெற்றுதான் கிரயம் பெற வேண்டும் என்றும், ஆனால்

மனுதாரர் அவ்வாறு எந்த அனுமதியும் பெறவில்லை என்றும், மனுதாரர் கோரியுள்ள பரிகாரமானது காலவரம்பு சட்டத்தால் பாதிப்படைகிறது என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iv) மேலும் தாவா சொத்து உட்பட இதர சொத்துகள் அர்த்தனாரி மற்றும் நல்லம்மாள் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி நபர்களுக்கு பெரியசாமி உட்பட 6 வாரிசுதாரர்கள் உள்ளனர் என்றும், மேற்படி வாரிசுதாரர்களிடையே தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாமல் கூட்டு அனுபவத்தில் இருந்து வரும் நிலையில், பாகம் பிரிக்காத மேற்படி சொத்து குறித்து மனுதாரரின் பெயரில் ஏற்பட்டுள்ள கிரயம் செல்லாதது என்றும், மேற்படி அர்த்தனாரி, நல்லம்மாளின் வாரிசுதாரர்கள் இவ்வழக்கில் அவசிய தரப்பினர்கள் என்றும், நீதிமன்ற ஆணையரை நியமித்து வழக்கு சொத்தை பார்வையிட வேண்டிய அவசியம் சட்டப்படி எழவில்லை என்றும் கூறியுள்ளது தெரிய வருகிறது.

(v) 8 முதல் 10ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்தில் மனுதாரருக்குள்ள சுவாதீனத்தை நிரூபிக்க மோசடியான கிரய ஆவணத்தை தவிர வருவாய்துறை ஆவணங்கள் எதையும் மனுதாரர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், 8, 9 எதிர்மனுதாரர்கள் கிரயம் பெற்றது குறித்தும், கிரய சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வந்தது குறித்தும், பின்னிட்டு 10ம் எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்தது குறித்தும், தாவா சொத்தின் சுவாதீனத்தில் 10ம் எதிர்மனுதாரர் இருந்து வருவது குறித்தும் மனுதாரருக்கு நன்கு தெரியும் என்றும், உரிய மறுபயன் கொடுத்து உரிய தரப்பினர்களிடம் சட்டத்திற்கு உட்பட்டு 8, 9 எதிர்மனுதாரர்கள் கிரையமும், சுவாதீனமும் பெற்றுள்ளனர் என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் பெயரிலுள்ள கிரய ஆவணங்களை கேள்வி கேட்க மனுதாரருக்கு தார்மீக அடிப்படையிலும், சட்டப்படியும் உரிமையில்லை என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(vi) மேலும் 8, 9 எதிர்மனுதாரர்கள் கிரயம் பெற்ற நிலத்தை ஏற்கனவே விற்பனை செய்துவிட்டதால் இவ்வழக்கிற்கு 8, 9 எதிர்மனுதாரர்கள் தேவையற்ற தரப்பினர்கள் என்றும், நீதிமன்ற ஆணையரை நியமித்து வழக்கு சொத்தை பார்வையிட வேண்டிய அவசியம் சட்டப்படி எழவில்லை என்றும், இவ்வழக்கை பொறுத்தவரை நீதிமன்ற

ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் அசல் வழக்கின் இறுதியான முடிவிற்கு தேவையில்லாத ஒன்று என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(vii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வாதி/மனுதாரரால் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. தாவா சொத்தானது மனுதாரருக்கு கிரயப்படி பாத்தியப்பட்டு, தாவாசொத்தின் சுவாதீனத்தில் மனுதாரர் இருந்து வருவதாகவும், இந்நிலையில் 10ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சி செய்த போது தான், தாவா சொத்தை பொறுத்து 1முதல் 6 எதிர்மனுதாரர்கள் 7ம் எதிர்மனுதாரர் பெயரில் பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தியது குறித்தும், 7ம் எதிர்மனுதாரரால் 8, 9 எதிர்மனுதாரர்கள் பெயரில் கிரய ஆவணம் அளிக்கப்பட்டது குறித்தும், 8, 9 எதிர்மனுதாரர்களிடமிருந்து 10ம் எதிர்மனுதாரர் கிரயம் பெற்றது குறித்த விவரங்கள் மனுதாரருக்கு தெரியவந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(viii) இவ்வழக்கில் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் பார்வையிட்டு, அளந்து அளவுகளுடன் அறிக்கை தாக்கல் செய்ய கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. வழக்குரை மற்றும் பதிலுரைகளை நன்கு பரிசீலிக்கையில், தரப்பினரிடையே தாவா சொத்தின் அளவு குறித்தோ, அல்லது அதன் எல்லைகளின் அளவு குறித்தோ, எவ்வித முரண்பாடுகளும் இல்லை என்பது தெரிய வருகிறது. அதேபோல் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் நிலையிலுள்ள அமைப்பு எதையும் மாற்றவோ, அழிக்கவோ முயற்சிப்பதாக எவ்வித பிரச்சனைகளும் தரப்பினரிடையே இல்லை என்பதும் தெரியவருகிறது.

(ix) பதிலுரைகளை பரிசீலனை செய்கையில், மனுதாரர் தாவா சொத்தை கிரயம் பெற்றதே சட்டப்படி தவறானது என்பதும், மேற்படி கிரயம் செல்லத்தக்கதல்ல என்பதும் தான் எதிர்மனுதாரர்களின் பிரதான எதிர்வாதமாக உள்ள நிலையிலும், தாவா சொத்தின் அமைப்பு மற்றும் அளவுகள் குறித்து தரப்பினரிடையே எவ்வித பிரச்சனையும் இல்லாத நிலையில், தாவா சொத்தில் உள்ள மனுதாரரின் சுவாதீனத்தை நிரூபிப்பதற்காக

நீதிமன்ற ஆணையரை நியமிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர் தனது சட்டப்படியான சுவாதீனத்தை தகுந்த ஆவணங்கள் மூலமாக தான் நிரூபிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு உள்ள நிலையில், நீதிமன்ற ஆணையரை நியமித்து தாவா சொத்தை பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்வது இவ்வழக்கை பொறுத்து அவசியமற்றது எனவும், அவ்வாறு உத்தரவிடும் பட்சத்தில் அது சாட்சியங்களை சேகரிப்பதாக ஆகிவிடும் எனவும், இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தகுதிப்பாடற்றது என கருதி இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.08.01 17:48:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u> இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.08.01 17:48:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.